[18th March 1961

Sub-Registrar's Office (Aiyampalayam)

*892 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஸ்ரீ அக்டோபர்மீ 10-ம் தேதி சென்னை மாகாண ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்களிடம் திண்டுக்கல் தாலூகா, ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த அய்யம்பாளையத்தில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் திறக்கும்படி எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டதா ?

(இ) அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes, Sir.

(*b*) The request is being examined by the Inspector-General of Registration.

SRI M. A. B. ARUMUGHASAMY: ஒரு ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வைப்பதற்கு அவசியமான காரணங்கள் எவை என்று சர்க்கார் கருதுகிறார்கள் ? அந்த ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: அந்த ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் புதியதாக அமைப்பது சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர் அவர்களே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அது இப்பொழுது பரிசிலனையில் இருக்கிறது என்றுதான் பதில் சொல்லியிருக்கிறேன்.

Grant of lands for cultivation

*893 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to give cultivable poramboke lands to all high schools for cultivation of paddy by the students for the use of mid-day meals in high schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI T. T. DANIEL: In view of the fact that there are a large number of students in almost all the high school classes who do not get mid-day meals, will the Government at least think of assigning some cultivable poromboke lands wherever available so that the students can have their school garden to grow vegetables; that will be an income for extending to the vast majority of pupils the mid-day meal programme in the schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think it will be practicable to assign lands and then cultivate them and get paddy particularly for the purpose. If it is a question of kitchen garden that could be considered wherever land is available.

SRI S. M. ANNAMALAI: சில பள்ளிக்கூடங்களில் சர்க்காரே பணம் கொடுத்து அதற்கென்று ஸ்பெஷல் கோர்ஸ் ஆரம்பித்திருக்கிறார்கள். இரண்டு ஏகர், மூன்று ஏகர் நிலம் அந்தப் பள்ளியின் மூலமாக வாங்கி அங்கேயே தானிய உற்பத்தி செய்வதற்காக வேண்டி ஏற்பாடு செய்து அந்தப் பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளுக்கும் training கொடுக்கவும் செய்கிறார்கள். அது போல அந்தத் திட்டத்தை எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

18th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் சொல்லுவது, "டைவர்ஷிபைடு கோர்ஷில்" விவசாயப் பகுதி ஆரம்பிப்பதற்கு நிலம் கொடுப்பதைச் சொல்லுகிறார்கள். எங்கு விவசாயப் பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நிலம் கொடுக்கப்படுகிறது.

Harijan Colonies (street lights)

* 895 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1959-60-ல் ஹரிஜன காலனிகளில் உள்ள தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போடப்படுவதற்காக ஹரிஜன நல இலாகா மூலமாக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எத்தனை விளக்குகள் போடப்பட்டன?

(இ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer[a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM: வருஷந்தோறும் சுமார் 1,000-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு சர்க்காரே மின்சார வசதி செய்து கொடுக்கிறது. ஹரிஜன வெல்பேர் பண்டுக்கு சுமார் ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதன் மூலம் மேற்கண்ட 1,000 கிராமங்களிலுள்ள ஹரிஜன தெருக்களுக்கு விளக்குப் போடுவதற்கு அந்தத் தொகை போதாது. சர்க்காரால் எந்தெந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த கிராமங்களிலுள்ள ஹரிஜன தெருக்களுக்கும் மின்சார விளக்குப் போட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை போதாமல் இருக்கிறது. சர்க்கார் இதை கவனித்து ஹரிஜன நல பண்டுக்கு மேலும் அதிகமான தொகை ஒதுக்கும்படி உத்தரவிடுவார்களா?

MR. SPEAKER: இப்படி நீளமாய் கேள்வி கேட்டால் என்ன செய்வது? இதைப் பற்றி எல்லாம் ஹரிஜன மானியக் கோரிக்கையின் பேரில் விவாதம் நடந்தபோது பேசியிருக்கலாம். ஆனால் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாயிருந்தால் சொல்லட்டும்.

THE HON. SRI V. RAMAIAH: ஹரிஜன காலனிகளுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்வது சம்பந்தமாக நான் ஏற்கனவே விவரமாக பதில் சொல்லியிருக்கிறேன். என்னுடைய பதிலிலும் விவரம் கூறப்பட்டிருக்கிறது. எங்கெங்கே மின்சார விஸ்தரிப்பு நடக்கிறதோ, அந்த ஊர்களிலெல்லாம் ஹரிஜன காலனி பக்கத்தில் இருந்தால், அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அங்குள்ள ஹரிஜன காலனிக்கும் மின்சார விஸ்தரிப்புக்கு இடம் இருந்தால் தான் அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் போகும். இல்லாவிட்டால் அந்தக் கிராமத்தில் மின்சார விஸ்தரிப்பு வேலை நடைபெறாது. 1,000, 1,500 கிராமங்களுக்கு நாம் மின்சார விஸ்தரிப்பு செய்தால், அந்த கிராமங்களிலுள்ள ஹரிஜன காலனிகளுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படுவதற்கு அந்தத் திட்டத்தில் இடம் இருக்க வேண்டும். இது மாதிரி நாம் எடுத்துக்கொண்ட முடிவுக்கு முன்பு எந்தெந்த ஊர்களில் மின்சார விஸ்தரிப்பு நடந்ததோ, அங்கே ஹரிஜன காலனிகள் மின்சார விஸ்தரிப்பு செய்யப்படாமல் விடப்பட்டிருந்தால், அந்த ஹரிஜன காலனிகளுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்வதற்கு ரூ. 10 லட்சம், 12 லட்சம் வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். அதற்காகத்தான் ஹரிஜன நல இலாகா விசேஷ மானியம் கோருகிறது. அதற்காகத்தான் இப்பொழுது 'பேஸ்டு' புரோகிராம் போட்டு, வருஷம் ஒன்றுக்கு ஹரிஜன நல இலாகாவிற்கு ரூ. 1 லட்சம், 2 லட்சம் என்று ஒதுக்கிக் கொடுக்கிறோம்.

SRI P. G. MANICKAM: தற்பொழுது ஒதுக்கப்பட்டு இருக்கும் ஒரு லட்ச ரூபாய் கிராமங்களுக்கு மின்சார விளக்குப் போடப்படும்பொழுது, அங்குள்ள ஹரிஜன தெருக்களுக்கு விளக்குகள் போடுவ

[a] Printed as Appendix I on page 89 infra.